<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 12.02.2026

அசல் வழக்கு எண். 62/2016

வா.சா. 1 – செல்வி, க/பெ. வேதமாணிக்கம்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.9 நீங்கள் தாக்கல் செய்த வாரிசு சான்றிதழில் உங்கள் பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.10 குடும்ப அட்டை வழக்குக்கு பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரி இல்லை. ஏற்கனவே உங்களை விசாரணை செய்த பொழுது எந்த ஆவணமும் இல்லை என்று கூறிவிட்டு பொய் ஆவணம் தயாரித்து தற்போது பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வாரிசு சான்றிதழில் உங்கள் பெயர் இல்லை அவ்வாறு இல்லாத காரணத்தினால் நீங்கள் வாரிசு இல்லை இந்த வழக்கு தாக்கல் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் பரமசிவம் என்பவரது மனைவி உங்களுக்கிடையே விவாகரத்து ஆன விவரங்கள் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை என் கணவர் இறந்து விட்டதால் நான் என் அம்மா வீட்டுக்கு வந்து விட்டேன். மேற்படி விவரங்களை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.